**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.III, ERODE.**

| | | | |
|---|---|---|---|
| Case No | : CC No.85/2018 | Date | : 02.03.2026 |
| Deposition of Witness for | : அ.சா. 7 | Taluk | : |
| Name | : பிரபாகரன் | Calling | : |
| Father Name | : | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 02.03.2026

(1 மற்றும் 3ம் எதிரிகள் ஆஜர், 2ம் எதிரி ஆஜர் இல்லை, எதிரிகளின் வழக்கறிஞர் ஆஜர். 2ம் எதிரியின் சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.).

**அரசு தரப்பு முதல் விசாரணை:**

1. நான் சித்தோடு காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து தற்போது பணிஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 29.06.2017ம் தேதி சித்தோடு காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக நான் நிலைய அலுவலில் இருந்தபோது, அரசு மருத்துவமனையில் இருந்த கிடைக்கப்பெற்ற அஞ்சலிதேவி என்பவரின் அசால்ட் இண்டிமேசனை பெற்று பவானி அரசு மருத்துவமனை சென்று பார்க்க அங்கு சிகிச்சையில் இருந்த அஞ்சலிதேவியை விசாரிக்க அவர் உறவினர்களை கலந்து ஆலோத்து புகார் கொடுப்பதாக கூறியதன்பேரில் நிலையம் வந்தேன்.

2. பின்பு மீண்டும் 01.07.2015ம் தேதி அஞ்சலிதேவி கொடுத்த தகவலின்பேரில் 13.00 மணிக்கு பவானி அரசு மருத்துவமனை சென்று சிகிச்சையில் இருந்த அஞ்சலிதேவியை விசாரித்து புகார்வாக்குமூலம் பெற்று நிலையம் வந்து

நிலைய குற்ற எண். 250/2015 சட்டப்பிரிவு 294(b). 323, 324, 506(i) இதச பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்து வாதியின் புகார் வாக்குமூலத்துடன் முதல் தகவல் அறிக்கையின் அசலை இணைத்து நீதித்துறை நடுவர் எண்.3 அவர்களுக்கு அனுப்பிவைத்தேன். புலன்விசாரணைக்காக ஒரு நகலை எடுத்துக்கொண்டேன். **(முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

3. நான் என்னுடைய புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 01.07.2015ம் தேதி மதியம் 15.00 மணிக்கு சம்பவம் இடம் சென்று சாட்சிகள் சுப்பிரமணி, முத்துசாமி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து பார்வை மகஜரில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். **(பார்வை மகஜர் அ.த.சா.ஆ. 5 ஆகவும், மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ. 6 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது)**

4. பின்பு சம்பவ இடத்தில் கிடந்த எதிரிகள் சம்பவத்திற்கு பயன்படுத்திய இரும்புகம்பி ஒன்றை அதே சாட்சிகள் முன்னிலையில் மதியம் 15.45 மணிக்கு கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். **(கைப்பற்றுதல் மகஜர் அ.த.சா.ஆ. 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. சாட்சிகள் அஞ்சலிதேவி, பிரபு, ஈஸ்வரமூர்த்தி, துரைசாமி, பிரகாஷ், தியாகராஜன், பாலாஜி, கலைமணி, சுப்பிரமணி, முத்துசாமி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

5. சம்பவ இட விசாரணையில் இருந்தும், சாட்சிகளின் வாக்குமூலத்தில் இருந்தும், சம்பவம் உண்மையென தெரிந்து எதிரிகள் வரதராஜன், குண்டுமுத்து(எ) முத்துசாமி, அன்பழகன் ஆகியோர்களை தேட அவர்கள் ஈரோடு முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் முன்ஜாமின் பெற்று பிணையில் சென்ற விவரம் தெரியவந்தது. 31.07.2015ம் தேதி அஞ்சலிதேவிக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் ஜெகன்மோகன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேட்டு நகல் மற்றும் காயச்சான்று பெற்றேன். வழக்கு சொத்தை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். **(படிவம் 91 அ.த.சா.ஆ. 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** பின்பு எனது புலன்

விசாரணை முடித்து 01 மற்றும் 02வது எதிரிகள் மீது 294(b) இதசபிரிவின் கீழும், 1வது எதிரி மீது 324 இதசவின் கீழும், 3வது எதிரி மீது 323, 506(I) இதச பிரிவின் கீழும் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தேன்.

**குறுக்கு விசாரணை**

1. இருதரப்பினார்கள் மீதும் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். இரண்டு வழக்குகளிலும் நான்தான் புலன் விசாரணை அதிகாரி என்றால் சரிதான். ஒரே சம்பவத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள இரண்டு வழக்குகளிலும் வேறு வேறு புலன் விசாரணை அதிகாரி தான் விசாரணை செய்து இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட வேண்டும் என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்தில் நான்கு நபர்கள் தாக்கியதாக கூறியுள்ள நிலையில் முதல் தகவல் அறிக்கை மற்றும் இறுதி அறிக்கையில் மூன்று நபர்களின் பெயர்கள்தான் உள்ளது என்றால் சரிதான். நான்கு தெரிந்த நபர்கள் கையால் தாக்கியதாகத்தான் விபத்து பதிவேட்டு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். கம்பியின் நீளம் மற்றும் அகலம் பற்றி புகார்தாரர் அஞ்சலிதேவி தன்னுடைய புகார் வாக்குமூலத்திலும் என்னுடைய விசாரணையிலும் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். இரண்டு நாட்கள் காலதாமதமாக புகார் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். காலதாமதத்திற்கான காரணம் குறித்து முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

2. புகார் வாக்குமூலத்தில் பதிவு செய்யப்பட்ட தேதி திருத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்தில் பத்தாவது வரியில் நேற்று 29.06.2015 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதன்படி பார்த்தால் புகார் வாக்குமூலம் 30.06.2015 ஆம் தேதி பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆறு நாட்கள் காலதாமதமாக முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்திற்கு வந்துள்ளது என்றால் சரிதான். மற்றொரு வழக்கில் கண்ணுற்ற சாட்சியாக விசாரணை செய்யப்பட்டுள்ள துரைசாமியை இந்த வழக்கில் நான் சாட்சியாக விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான்.

3. சம்பவ இடத்திற்கு அருகில் உள்ள கடைக்காரர்கள் மற்றும் குடியிருப்பு வாசிகளை நான் விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். மற்றொரு வழக்கில் உள்ள எதிரிகள் அஞ்சலிதேவி, பிரகாஷ், பிரபு ஆகியோர்கள் இந்த வழக்கில் சாட்சிகளாக உள்ளார்கள் என்றால் சரிதான். அஞ்சலிதேவிக்கு ஏற்பட்டுள்ளதாக சொல்லப்படும் காயமானது வழக்கில் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்று பொருளாலும் ஒன்றாவது எதிரியாலும் ஏற்பட்டதல்ல என்றால் சரியல்ல. இரு தரப்பினர்களுக்கும் ஏற்கனவே முன் விரோதம் இருந்து வந்த நிலையில் இந்த வழக்கின் எதிரிகளை தான் மற்றொரு வழக்கின் எதிரிகள் தாக்கினார்கள் என்றும், அந்த வழக்கில் இருந்து தப்பிக்க வேண்டி இந்த வழக்கில் பொய்யான புகார் வாக்குமூலம் கொடுத்ததை சரிவர புலன் விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த எதிரிகளுக்கும் இந்த வழக்கத்திற்கும் சம்பந்தமில்லை என்றால் சரி அல்ல.

4. நான் சொல்வது போல் இந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில், சொன்ன நேரத்தில் வைத்து புகார் வாக்குமூலம் பதிவு செய்யப்படவில்லை என்றும், அதன் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. புகார்தர்களிடமிருந்து வெற்றுத் தாளில் கையொப்பம் பெறப்பட்டு பின்னிட்டு பொய்யாக புகார் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கின் சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருள் ஆகியவை வழக்கிற்கு பின்னிட்டு பொய்யாக தயாரிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் எந்த சாட்சிகளையும் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல.

Taken Down by Before Me and Dictated By Me and Typed By the Typist in Open Court Read Over Interpreted on the witness in the presence of the accused/accused pleader and Admitted by the witness to be correct.

S R BABU

Digitally signed by S R BABU
Date: 2026.03.02 17:03:15 -0800

Judicial Magistrate No.III,

Erode.